**O.S.No. 63/2022**

**Date: 17.06.2025**

**வா.சா 1  மணிகண்டன்**

**பிரதிவாதி  தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் காலத்தில் இருந்து பிரதிவாதி எங்களுக்கு பழக்கம். பிரதிவாதியின் தகப்பனார் பெயர் பாலையாத்தேவர் ஆகும். பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியாது. பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றுள்ளேன். நான் தற்போது விவசாயம் பார்த்து வருகிறேன். பிரதிவாதிக்கு விவசாயத்தில் இருந்து வந்த வருமானத்தை பணமாக கொடுத்தேன். ரூ–500 தாள்கள் 10 கட்டுகள் வீதம் 30.07.2019 அன்று பணம்ரூ.5 லட்சம் கொடுத்தேன். எனக்கு 3 குழந்தைகள் உள்ளனர். எனது குழந்தைகளின் பிறந்த தேதி விவரம் தெரியும். வருடம் தெரியும் தேதி தெரியாது. எனது மனைவியின் பிறந்த தேதி தெரியாது. எனது வீட்டில் வைத்து பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். 2 வாரத்திற்கு முன்பே பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார். தெரிந்த ஆட்களை கூப்பிட்டு வாருங்கள் பணம் தருகிறேன் என்று கூறினேன். காலையில் 8 மணிக்கு எனது வீட்டிற்கு முருகனையும், சாமி என்பவரையும் அழைத்து வந்தார். வா.சாஆ.1 எழுதியவரையும் உடன் அழைத்து வந்தார். வா.சாஆ.1 எழுதியதற்கு யார் விவரங்கள் கூறியது யார் என்றால் பிரதிவாதி. பிரதிவாதி என்னிடம் பணம் பெற்றார். என்னிடம் பணம் பெற்ற பிறகு வா.சாஆ.1 ஆவணம் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் வைத்து எழுதினோம். மேற்படி ஆவண எழுத்தர் அலுவலகம் கரிவலம்வந்தநல்லூரில் உள்ளது– ஆவண எழுத்தரின் சொந்தஊர் இராமலிங்கபுரம் ஆகும். வா.சா–ஆ.1 ஆவணம் காலை 10 மணிக்கு எழுதி முடித்தோம். சாட்சிகளை பிரதிவாதி தான் அழைத்து வந்தார். நான் வா.சாஆ.1 ல் கையொப்பம்செய்யவில்லை. பிரதிவாதி 2 கையொப்பங்கள் செய்தார். என்ன கலர் மையினால் வா.சாஆ.1 ல் கையொப்பம் செய்தார்கள் என்றால் நினைவில்லை. பிரதிவாதி என்னிடம் பணம் பெறும் போது சாட்சிகளும் உடன் இருந்தனர். வா.சாஆ.1 முழுமையாக கையால் எழுதப்பட்டதா என்றால் அச்சிடப்பட்டு இருந்தது அதில் நிரப்பும் படியாக இருந்தது. நம்பிக்கையின் அடிப்படையில் பிரதிவாதிக்கு பணம்கொடுத்தேன். SNR பள்ளி அருகில் இருக்கும் முத்துராஜ் என்பவர் குறித்து எனக்கு தெரியாது.

பிரதிவாதிக்கும் எனக்கும் எந்தவித பழக்கமும் கிடையாது என்றாலும் பிரதிவாதியை நான் பார்த்தது கிடையாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் ரூ.5 லட்சம் பணம் பெற்றது கிடையாது என்றால் சரியல்ல. SNR பள்ளி அருகில் இருக்கும் முத்துராஜ் என்பவரிடம் தான் பிரதிவாதி கடன் பெற்றிருந்தார் என்றாலும், அதற்கு ஆதரவாக பிரதிவாதி முத்துராஜ்க்கு கடனுறுதிசீட்டு எழுதிகொடுத்திருந்தார் என்றாலும் அந்த கடனையும் பிரதிவாதி கொடுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல. நான் மேற்படி முத்துராஜின் நெருங்கிய உறவினர் என்றாலும், மேற்படி முத்துராஜின் தூண்டுதலின் பேரில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நானும் முத்துராஜிம் சேர்ந்து கொண்டு வாதியின் கையொப்பத்தை மோசடியாக வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நேரடி பணபரிமாற்று சட்டத்திற்கு புறம்பாக பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு மோசடியானது என்பதால் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மவி இல்லை.**